A US 501(c)(3) Tax-exempt Non-profit OrganizationFederal Tax ID 47-4015793

Ms.Sinthuka Vivekananthan
President
Care for Education
In collaboration with University of Vavuniya

மொண்டிசொறி ஆசிரியர் செயலமர்வில் ஆறு நாட்கள் பங்கேற்பதற்கான விண்ணபங்கள்கோரல்- 2026 டிசம்பர் 18 – 23 வரை

முன்பள்ளி ஆசிரியர்களே,

Care for Education நிறுவனமும் வவுனியா பல்கலைக்கழகமும் (University of vavuniy – UOV) இணைந்து இலங்கையின் வட மாகாணத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்காக 2026 டிசம்பர் 18 முதல் 23 வரை வவுனியா பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள மொண்டிசோரி ஆசிரியர் செயலமர்வில் ஆறு நாட்கள் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இலங்கைக்கு வருகை தரவுள்ள அமெரிக்க மொண்டிசோரி அகெடமியைச் (American Montessori Academy) சேர்ந்த சிறந்த அனுபமும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுநர் தகுதியும் கொண்ட திருமதி எலிசபெத் துரைரத்தினம் அவர்கள் இச் செயலமர்வை வழிநடத்துவார். ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வி முறைமைகள், செயன்முறை அடிப்படையிலான மொண்டிசொறி கற்பித்தல் அணுகுமுறைகள், மற்றும் நவீன வகுப்பறை முகாமைத்துவ உத்திகள் தொடர்பான மதிப்புமிக்க நிபுணத்துவத்தை அவர் கொண்டுள்ளார்.

மொண்டிசோரி கல்வி அணுகுமுறையானது குழந்தையை மையமாகக் கொண்ட அனுபவழிக் கற்றலுக்கு வலுவான அடித்தளத்தை வழங்குவதுடன் இளம் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிகும் ஆதரவளிக்கின்றது. இச் செயலமர்வின் நோக்கம் மொண்டிசோரி கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகள். மொண்டிசோரி கற்பித்தல் உபகரணங்களின் பயன்பாடு. கற்றல் சூழலைத் தயாரித்தல்.குழந்தைகளை அவதானித்தல். குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஏற்ற கற்பித்தல் உத்திகள், மற்றும் பயனுள்ள வகுப்பறை முகாமைத்துவம் ஆகிய துறைகளில் முன்பள்ளி ஆசிரியர்களின் தொழில்சார் அறிவையும், செயன்முறைத் திறன்களையும் மேம்படுத்துவதாகும்.

தரமான ஆரம்பக்குழந்தைப் பருவக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து வட மாகாணத்தின் முன்பள்ளி ஆசிரியர்கள் தமது தொழில் சார் திறன்களை மேம்படுத்திக்கொள்ளவும். தத்தமது முன்பள்ளிகளில் கற்பித்தல் மற்றும் கற்றலின் தரத்தை உயர்த்தவும் பெறுமதியான வாய்ப்பை வழங்கும் நோக்கில். Care for Education நிறுவனமும் வவுனியா பல்கலைக்கழகமும் இணைந்து இச் செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளன.
இச் செயலமர்வில் செயன்முறை விளக்கங்கள் நேரடிச் செயற்பாடுகள் கலந்துரையாடல்கள் மற்றும் வளவாளரின் வழிகாட்டுதலின் கீழான தொழில்சார் கற்றல் வாய்புகள் ஆகியவை இடம்பெறும்.

- **விண்ணப்ப முடிவுத்திகதி :- 20-Nov-2026**

முக்கியமான குறிப்பு:

- **இச் செயலமர்வில் ஆறு நாட்களும் பங்கேற்பது கட்டாயமாகும்.**
  கற்றல் தொடர்ச்சியை உறுதிப்படுத்தவும், பயிற்சியின் மூலம் அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும். பங்கேற்பாளர்கள் 2026 டிசம்பர் 18 முதல் 23 வரை நடைபெறும் முழுமையான செயலமர்விலும் கலந்து கொள்ள வேண்டும்

- **குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் செயலமர்வில் கலந்து கொள்ளல்.**
  காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை செயலமர்வு நடைபெறும். குறிக்கப்பட்ட நேரத்தில் அனைவரும் தமது வரவினை பதிவ செய்ய வேண்டும்.

- **Photo & Video எடுப்பதை தவிர்க்க வேண்டும்**
  ஏனைய ஆசிரியர்களுக்கும் வளவாளருக்கும் இடையூறு ஏற்படாத வகையில் அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

- **குறிப்பெடுத்தல்**
  கற்கும் விடயங்களை குறிப்பெடுத்து கொள்ள அனைவரும் CR கொப்பி மற்றும் பென்சில் என்பவற்றை கொண்டு வரவும். மொண்டிசோரி கற்றல் உபகரணங்களை பாதுகாக்கும் எண்ணத்தில் பேனா பயன்படுத்துவதை தவிர்த்தல் நன்று.

  உங்களது பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள **Google** படிவத்தின் மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். பங்கேற்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

உங்களது ஆர்வமிக்க பங்கேற்பையும் ஒத்துழைப்பையும் எதிர்ப்பார்ப்பதுடன் இச் செயலமர்வை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு உங்கள் அனைவரினதும் ஆதரவை வேண்டுகின்றோம்.

நன்றி